2018 ஜூலை 5]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2018), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2018)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமானது, சட்டக் கல்லூரிகளைப் புதிதாக தமிழ்நாடு அரசு உருவாக்காமல், தனியார்கள் உருவாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 2014 ஆம் ஆண்டு இவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில்தான், All India Bar Council மூன்று ஆண்டு காலத்திற்கு தனியார் சட்டக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவது நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்ததன் பயனாக சட்டத்தைக் கொண்டுவந்து, தனியாருக்கு சட்டக் கல்லூரிகளைத் துவங்குவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், 2016 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்திலே Writ Petition ஒன்றைத் தாக்கல் செய்ததன் காரணமாக, 2016 ஆம் ஆண்டு தனியார்கள் சட்டக் கல்லூரிகளை நிறுவுவதை முழுமையாக தடை செய்ய முடியாது என்று ஓர் உத்தரவு இடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்பாகவே பொருளாதாரத்திலும், சமூகத்திலும் பின்தங்கிய பிரிவினருக்கு குறைந்த செலவிலே சட்டக் கல்வியை அளிக்க முடியவில்லை என்பதையும், சட்டக் கல்லூரிகள் தொடர்ந்து தனியாரால் நடத்தப்பட முடியவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, தனியாரால் ஒரு சட்டக் கல்லூரியில், சாதாரணமானவர்களுக்கு சரியான கல்வியைக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறபொழுது, ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது என்பது சட்டத்தில் வழிமுறைகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல், ஏதோ அவர்களுக்கு சலுகை வழங்கினால்தான் இந்தச் சட்டக் கல்லூரிகளை தனியார் நடத்த முடியும் என்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆக, தனியாருக்கு சலுகைகளை வழங்கி சட்டக் கல்லூரிகளை அவர்களே நடத்த விடுவதைவிட அந்தச் சலுகைக்கான தொகைகளை வைத்துக்கொண்டு அரசாங்கமே சட்டக் கல்லூரிகளை நடத்தினால் அது சரியாக இருக்கும். அவ்வாறு இல்லாமல் தனியாருக்கு சட்டக் கல்லூரிகளை

ஒதுக்குகிற நேரத்தில் அரசாங்கம் சில விதிமுறைகளை அவர்களுக்கு விதிக்க வேண்டும். தனியார் சட்டக் கல்லூரிகள் Communal G.O.s—ஐ பயன்படுத்த வேண்டும். தமிழிலே பாடத் திட்டங்களை உருவாக்கி, தமிழிலே சட்டக் கல்லூரியில் படிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

பிற்பகல் 4—15

இன்னொன்று, நம்முடைய சட்டக் கல்லூரிகளில், சில நேரங்களில் நூலகத்திலே புத்தகங்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை. நான் சட்டக் கல்லூரியிலே படித்த காலத்தில், நூலகத்தில் ஒரு புத்தகத்தை எடுத்து மூன்றாகப் பிரித்து 3 பேர் படித்த காலங்கள் எல்லாம் இருந்தன. ஆகவே, தனியாருக்கு சட்டக் கல்லூரிகளை ஒதுக்குகின்ற நேரத்தில், அங்கு Moot Court மாதிரி நீதிமன்றங்களை உருவாக்க வேண்டுமென்று விதிகள் இருப்பதாகச் சொல்கிறீர்கள். ஆக, அவர்களுக்கு சரியான நிபந்தனைகளை விதித்து, அந்த விதிமுறைகளுக்கு உட்படுவார்களேயானால், தனியாருக்கு அந்த அனுமதியைக் கொடுக்கலாம். ஆனால், ஒன்றேயொன்று; போலியான வழக்கறிஞர்கள் வராமல் தடுப்பதற்கு வழிவகை செய்வது முக்கியமாக இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, தனியார் கல்லூரிகளுக்கு சலுகைகளைக் கொடுப்பதைவிட, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையின்படி, அரசாங்கமே செலவு செய்து சட்டக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் புதியதாக சட்டக் கல்லூரிகளை நிறுவுவதுதான் சரியாக இருக்கும் என்ற கருத்தைப் பதிவு செய்து நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதில் தனியார் சட்டக் கல்லூரியை இந்த அரசு ஊக்குவிக்கிறது என்பதை மறுக்கின்றேன். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் 2014—ல் தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தமிழகத்திலே தனியார் சட்டக் கல்லூரிகளைத் தொடங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த

[திரு. சி.வி. சண்முகம்] [2018 ஜூலை 5

அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. ஆனால், உயர் நீதிமன்றத்திலே ஒரு கல்லூரியை தனியார் தொடங்கக் கூடாது என்பதற்கு தடை விதிக்க முடியாது என்று உத்தரவிட்ட நிலையில், உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கு தற்போது நிலுவையில் இருக்கின்றபோது, ஓர் இடைக்காலத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கி, தற்போது திண்டிவனத்தில் இருக்கின்ற சரஸ்வதி சட்டக் கல்லூரிக்கு இடைக்கால அனுமதி வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டதுடன், தனியார் சட்டக் கல்லூரிகளை முழுமையாகத் தடை செய்ய முடியாது என்ற ஒரு கருத்தையும் தெரிவித்த காரணத்தால், தனியார் சட்டக் கல்லூரிகளைத் தடை செய்ய முடியாதபட்சத்தில், அந்தக் கல்லூரிகளை முறைப்படுத்த வேண்டுமென்றதொரு நோக்கத்தில்தான், புற்றீசல்போல தனியார் சட்டக் கல்லூரிகள் வந்துவிடக் கூடாது என்பதற்காக, கடுமையான நிபந்தனைகளை விதித்து, அந்தச் சட்டத்தைத் திருத்தி, இந்த முறைப்படுத்துகின்ற சட்டம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்லியதைப்போல, Moot Court இருக்க வேண்டும், நூலகங்கள் இருக்க வேண்டும் என்பது அந்த திருத்தப்பட்ட சட்ட விதிகளிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு முக்கியமான ஓர் அம்சம், எந்த மாவட்டத்திலாவது அரசு சட்டக் கல்லூரிகள் இருந்தால், அந்த மாவட்டத்திலே புதியதாக தனியார் சட்டக் கல்லூரி தொடங்க அனுமதிக்கப்படமாட்டாது என்று அந்த விதியிலே சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, அரசே சட்டக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த அரசும் செய்யாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் இந்த அரசில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள்தான் கடந்த ஆண்டு, ஒரே ஆண்டிலே 3 சட்டக் கல்லூரிகளைத் தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, எந்தத் தனியார் நிறுவனங்களும் அமைக்க முடியாத அளவிற்கு விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரிக்கு 70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இப்போது அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அளவிற்கு அரசு சட்டக் கல்லூரிகளை நிறுவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, தனியார் சட்டக் கல்லூரிகளை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. தனியார் சட்டக் கல்லூரிகள் முறைப்படுத்தப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 4—20

(இ) சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2018), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.